சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 31.03.2020

## சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் பங்குனி மாதம் 18–ஆம் நாள் (மார்ச் திங்கள் 31–ஆம் நாள்:– 31.03.2020) செவ்வாய்க் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான ஆடுவதை செய்யும் கூடத்திற்கு (Slaughter House) 2020–2021–ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் (Renewal) மேற்கொள்ளும் பொருட்டு புதுப்பித்தல் கட்டணம் ரூ.8800/–ஐ செலுத்த வேண்டும் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (பொ) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தேனி அவர்களின் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்கண்ட தொகையினை வங்கி வரைவோலை எடுத்து தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தேனிக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் (ந.க.எண்.1112/2009/எச்1).**

**தீர்மான எண், நாள்** **831, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு வ.உ.சி முதல் தெருவில் கதவு எண்.7/1–இல் குடியிருக்கும் திருமதி.ர.பிருந்தா க/பெ.ரவிச்சந்திரன் என்பவர், மேற்படி குடியிருப்பு வீடு கட்டும் பொழுது, குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்குரிய இணைப்பு பெற்று, வீடு கட்டி வந்ததாகவும், தற்சமயம் வீடு கட்டும் பணி நிறைவு பெற்று, குடியிருப்பு உபயோகமாக பயன்படுத்தி வருவதாகவும், அன்னாருடைய 09.04.2019–ஆம் நாளிட்ட விண்ணப்பத்தில் தெரிவித்து, மேற்படி வீட்டிற்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்பினை வீட்டு உபயோக இணைப்புக்குரிய கட்டணமாக (Domestic Purpose) மாற்றி நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளனர்.

மேற்படி கட்டிடத்தினை ஆய்வு செய்து குடிநீர்ப் பணி மேற்பார்வையாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் அறிக்கை செய்துள்ளதை ஏற்று, வார்டு எண்.4, வ.உ.சி தெருவில் உள்ள கதவு எண்.7/1–க்கு வழங்கப்பட்டுள்ள இணைப்பு எண்.121/004/00461 (பழைய இணைப்பு எண்.121/4509)–ஐ வீட்டு உபயோக அல்லாத இணைப்பிலிருந்து, வீட்டு உபயோக இணைப்பாக மாற்றி கேட்பு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **திருமதி.ர.பிருந்தா என்பவரின் பெயரில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு எண்.121/004/00461 (பழைய இணைப்பு எண்.121/4509)–ஐ வீட்டு குடிநீர் உபயோக இணைப்பாக மாற்றம் செய்து கேட்பு நிர்ணயம் செய்ய அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **832, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.3

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோரானா வைரஸ் (Corana Virus) பராவமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினியான லைசால் (Lysol) வாஙக நகர்மன்ற தீர்மான எண்.818, நாள்.28.02.2020ம் அன்று அனுமதி பெற்றதை தொடர்ந்து 16.03.2020–ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங ஏற்றுமதி மற்றும் விநியோகம், திண்டுக்கல் | 1 லிட்டர் ரூ.280/– (GST நீஙகலா) |
| 2. | ஸ்ரீ விநாயகா பார்மா, (பார்மா மற்றும் சித்தா விநியோகம், பொள்ளாச்சி) | 1 லிட்டர் ரூ.310/– (GST நீஙகலா) |

**அலுவலகக் குறிப்பு:–**

**1. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.பாலாஜி, மார்க்கெட்டிங, திண்டுக்கல் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்பு.ளியினை மன்றம் ஏற்கலாம்.**
**2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0434/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **833, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை மாலைமலர்– பொஙகல் மலர் 2020–இல் விளம்பரம் செய்தமைக்கு M/s Malar Publications Pvt Ltr, Chennai அவர்களுக்கு தொகை ரூ.9870/– வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0248/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **834, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3636/2019/ஊ.வ.4, நாள்.30.09.2019—இன்படி உள்ளாட்சித் தேர்தலுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் அச்சடித்தல் பணிக்கு, ஹமீதீன் பிரிண்டர்ஸ், மதுரை—20 என்ற அச்சகத்தின் மூலம் சின்னமனூர் நகராட்சிக்கு உரிய வாக்காளர் பட்டியலினை அச்சிட அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் அச்சகத்தில் புகைப்படத்துடன் கூடிய 1 முதல் 27 வார்டுகளுக்குரிய வாக்காளர் பட்டியல் 10 எண்ணம் சிங்கிள் சைடு மற்றும் டபுள் சைடு 50 எண்ணம் வாக்காளர் பட்டியல் அச்சிடப்பட்ட வகையில் ஆன செலவினம் ரூ.38502/— சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1195/2019/எப்1)**

**தீர்மான எண், நாள்** **835, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சியின் கீழ் இயஙகி வரும் பாதாள சாக்கடை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய உரிமம் 31.03.2020 அன்றுடன் முடிவடைகிறது. 2020—2021ம் ஆண்டுக்கான உரிமம் புதுப்பிக்க ரூ.43600/—க்கான தொகையை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களுக்கு வஙகி வரைவோலையாக எடுத்து அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்கண்ட செலவினத்தை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.**
**3. மேற்கண்ட செலவினத்தை பாதாள சாக்கடை நிதியில் இருந்து ஈடு செய்யலாம்.**

**தீர்மான எண், நாள்** **836, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27, அழகர்சாமி நகர் பகுதியில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைப்பதற்கு நகர்மன்றத் தீர்மான எண்.819, நாள்.28.02.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 19.03.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.27 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு.
2. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.26 சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:—** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் 0.27% குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0486/2020/இ2)**

**தீர்மான எண், நாள்** **837, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு தேவையான லைசாலை (Lysol) குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங் (Export and Distributors), திண்டுக்கல் நிறுவனத்திடமிருந்து 500 லிட்டர் பெறப்பட்டது. மேற்படி லைசாலை (Lysol) 5000லிட்டர் தண்ணீர் கொள்ளளவு கொண்ட Jet Roding வாகனத்தில் 1:19 என்ற விகிதத்தில் லைசால் கலந்து தெளிப்பதற்கு 1000 லிட்டர் தண்ணீருக்கு 50 லிட்டர் லைசால் என்ற அளவில் பயன்படுத்தப்பட்டது. இதனால், லைசால் இருப்பு குறைந்துவிட்டதால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்திரவுப்படி, தேவையான அளவு கிருமிநாசினி இருப்பு வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதாலும், தொடர்ந்து நகர் முழுவதும் கிருமிநாசினி தெளிக்க Hand Sprayer & Jet Roding வாகனத்தை அனைத்து பகுதிக்கும் அனுப்பி தெளிக்க வேண்டி இருப்பதாலும், தொற்று நோயின் தாக்கம் அதிகமாக பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து பகுதிகளிலும் தெளிக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து வழஙகப்பட்ட பட்டியலில், வெளிநாட்டிலிருந்து வந்தவர்களின் எண்ணிக்கை (Home Quarantine) 10க்கும் அதிகமாக இருப்பதால், அவர்களின் வீடு மற்றும் உறவினர் வீடுகள் மேலும், அப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகள், பொது மக்கள் அதிகமாக வந்து செல்லும் ATM சென்டர்கள், காய்கறி கடைகள், அரசு வாகனங்கள் மற்றும் அனைத்து தெருக்களிலும் லைசால் கலந்த தண்ணீர் தெளிக்க வேண்டியுள்ளதாலும், அவசர அவசியம் கருதி, இச்சூழலில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர முடியாத அளவிற்கு (Emergency) அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், ஏற்கனவே இந்நகராட்சிக்கு லைசால் வழங்க மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனத்திடமிருந்து தேவையான அளவு லைசால் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தேவைக்கேற்ப வாங்குவதற்கும், அதற்காகும் மொத்த செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.434/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **838, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் ஆக்கிரமிப்பு செய்து தினசரி விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 11.02.2020 மற்றும் 28.02.2020ம் தேதிகளில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் வைப்புத் தொகை செலுத்தி ஒருவரும் ஏலம் கோர மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க யாரும் முன்வரவில்லை.

மேற்கண்ட இனத்திற்கு 17.03.2020ம் தேதி நடைபெற்ற மூன்றாம் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஒருவர் மற்றும் முன்வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேலும், மூன்று நபர்கள் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கேட்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏலதாரர் / ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பி.ராஜேந்திரன், த/பெ.பழனிச்சாமி, வார்டு எண்.6, வடக்கு அய்யன் கோவில் தெரு, சின்னமனூர் | ரூ.4,63,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் மட்டும்) |
| 2. | பி.ஜெகதீசன் த/பெ.பி.ராஜேந்திரன் வார்டு எண்.6, வடக்கு அய்யன் கோவில் தெரு, சின்னமனூர் | ரூ.4,62,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) |
| 3. | எம்.நவீன் த/பெ.சி.முருகேசன் வார்டு எண்.5, அய்யன் கோவில் தெரு, கோட்டூர். | ரூ.4,56,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரம் மட்டும்) |

| வ.எண். | ஏலதாரர்/ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற விவரம் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | எம்.பால்பாண்டி த/பெ.மாயாண்டித் தேவர் பண்ணைப்பட்டி, உசிலம்பட்டி போஸ்ட் | ரூ.4,90,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூராயிரம் மட்டும்) |

அலுவலகக் குறிப்பு:–

1. மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் குத்தகைதாரர் திரு.எம்.பால்பாண்டி த/பெ.மாயாண்டித் தேவர் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்சமாக ரூ.4,90,000/– கோரியுள்ள தொகை சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.68840/– கூடுதலாகவும், மூன்றாண்டுகள் சராசரியைக் காட்டிலும் ரூ.96164/– கூடுதலாகவும் உள்ளது.
2. திரு.எம். பால்பாண்டி த/பெ.மாயாண்டித் தேவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.5431/2017/அ2)

தீர்மான எண், நாள் 839, நாள்.31.03.2020

தீர்மானம்

*******

**பொருள் எண்.10**

மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 10.03.2020ம் தேதிய ந.க.1011/2019/அ1 எண்ணிட்ட செயல்முறை உத்தரவின்படி, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN60CG0888க்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.33600/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**
**3. அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளிகள் கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1027/2020/இ2)**

**தீர்மான எண், நாள்** **840, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தமான ஈப்பு வாகனம் வண்டி எண்.TN60CG0888க்கு சில மராமத்து பணி மேற்கொள்ளும் பணிக்கு 12.03.2020ம் தேதிய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | ஓசோன் கேர், கம்பம் ரோடு, தேனி | ரூ.33050/– |
| 2. | அகரம் மோட்டார்ஸ், கம்பம் | ரூ.34600/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் ஓசோன் கேர், கம்பம் ரோடு, தேனி நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**
**3. அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கி செலவு செய்ததற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1027/2020/இ2).**

**தீர்மான எண், நாள்** **841, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சியின் வருவாய் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதிகளின் 2019–2020–ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு / செலவு அறிக்கை (Revised Budget) மற்றும் 2020–2021–ஆம் ஆற்டிற்கான உத்தேச வரவு செலவு அறிக்கை (Budget) மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1662/2019/பி1)**

**தீர்மான எண், நாள்** **842, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கொரோனா தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக 1 லிட்டர் 1% ஹைப்போகுளோரைடு சொலுசன் 5 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து Jet Rodding வாகனம் மற்றும் கைப் பம்புகள் (Hand Sprayer) மூலம் தெளிக்க வேண்டிய அவசர அவசியம் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தொற்று தடுப்பு ஆலோசனைக் கூட்டத்தில் போதிய அளவு அத்தியாவசிய கிருமி நாசினிகளை குறிப்பாக 1% ஹைப்போகுளோரைடு சொலுசன் தேவையான அளவு இருப்பு வைத்திருக்க அறிவுறுத்தியதை தொடர்ந்தும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தொற்று நோய் கிருமிகளை அழிக்க நோய் கிருமிகளை அழித்து தேவையான கிருமி நாசினிகளை இருப்பில் வைத்திருக்க அறிவுறுத்தியுள்ளார்கள். மேற்படி கிருமி நாசினியை தேவையான அளவு தேவைக்கு ஏற்ப வாங்குவதற்கும் அதற்காகும் மொத்த செலவினத்தை செலவு செய்ய மன்றம் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.434/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **843, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கான வீட்டிற்கே சென்று மளிகை சாமான்கள், ஆடு, கோழி, மீன் இறைச்சி மற்றும் காய்கறிகள் வழங்குதல் குறித்து நோட்டீஸ் அச்சிடும் பணிக்கு அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி பணிவிதி 15–இன் கீழ் 01.04.2020 ஆம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தொகை ரூ.24500/– கோரிய ஸ்ரீ கமலி கம்ப்யூட்டர் பிரஸ், சின்னமனூர் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கி நோட்டீஸ் அச்சிட்டதற்கான தொகை வழங்குவதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:–** **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–இன் கீழ் பணி மேற்கொண்டு வேலை உத்தரவு வழங்கி தொகை வழங்குவதை மன்றத்தில் பதிவு செய்யலாம். (ந.க.எண்.434/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **844, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சியின் தலைமை நீரேற்றத்தில் இயங்கி வரும் 140 KVA ஜென்செட்டுக்கு 150 MPS புதிய மின் கலப்பெட்டி (Battery) வாங்கி பொருத்தும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.814, நாள்.04.02.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 13.03.2020–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.K.வனராஜ், சின்னமனூர் | ரூ.18000/– |
| 2. | கோகுல் பவர் சிஸ்டம், கே.கே.குளம், சின்னமனூர் | ரூ.19000/– |
| 3. | கனகராஜ் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், சின்னமனூர் | ரூ.19500/– |

**அலுவலகக் குறிப்பு:–** 
**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.கா.வனராஜ், ஒப்பந்தக்காரர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6381/2012/இ2).**

**தீர்மான எண், நாள்** **845, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சிக்குச் 2018–2019–ஆம் நிதியாண்டிற்கு அனுமதிக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டப் பணிகளில் (TURIP -2018–19) சிப்பம் எண்.3–இல் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளில் எள்ளுக்கட்டை சாலையில், சாலையின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டதுடன், மேற்படி தடுப்பு சுவர் அமைக்க RCC 1:11/2:3-க்கு வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் பணி மேற்கொள்ளப்படும் பொழுது RCC 1:11/2:3-க்கு பதிலாக PCC 1:2:4 அமைத்து தடுப்புச் சுவர் பணி மேற்கொண்டால் போதுமானது என வாய் மொழியாக மண்டல செயற்பொறியாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் ஆகியோர்களால் அறிவுரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட RCC 1:11/2:3-க்கு பதிலாக PCC 1:2:4 மூலம் எள்ளுக்கட்டை ரோட்டில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி நிறைவு செய்யப்பட்டது. இதனால் மதிப்பீட்டின்படி மீதமான தொகையில் நகராட்சிப் பகுதிக்குள் பழுதடைந்த கீழ்க்கண்ட சாலைகளில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | சாலையின் பெயர் | சாலையின் நீளம் |
|---|---|---|
| 1. | காந்தி நகர் காலனி 4வது தெரு, காந்தி நகர் காலனி 5வது தெரு, காந்தி நகர் காலனி 6வது தெரு, காந்தி நகர் காலனி 7வது தெரு, முத்தாலம்மன் கோவில் குறுக்குத் தெரு, காளியம்மன் கோவில் குறுக்குத் தெரு | 1427 மீட்டர் |

**அலுவலகக் குறிப்பு:–** 
**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1227/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **846, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.17**

சின்னமனூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள், இரசீது புத்தகங்கள், எழுது பொருட்கள் அனைத்தும் வாங்கவும், 2020–2021–ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண், நாள்** **847, நாள்.31.03.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.18**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக 10 கிலோ பிளிச்சீங் பவுடர் 30 லிட்டர் தண்ணீரில் கலந்து சொலுசன் தயார் செய்து Jet-Rodding வாகனத்தில் தண்ணீருடன் கலந்து வீடுகளின் முன்பகுதி மற்றும் சாலை ஓரங்களில் தெளிக்கவும், பொது இடங்கள் மற்றும் தெருக்கள் குடியிருப்பு பகுதிகள், கால்வாய் ஓரங்கள், மேலும் தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் வீடுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள தெருக்களில் பயன்படுத்த வேண்டிய அவசர அவசியம் அத்தியாவசிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தொற்று நோய் கிருமிகளை அழிக்க தேவையான கிருமி நாசினிகளை இருப்பில் வைத்திருக்க அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் கிருமி நாசினி இருப்பு விவரத்தை நகராட்சி ஆணையர், சென்னை, மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் உள்ளது. எனவே மேற்படி கிருமி நாசினியை தேவையான அளவு தேவைக்கு ஏற்ப வாங்குவதற்கும் அதற்கான மொத்த செலவினத்தை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**
2. **மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையார் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0434–2/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **848, நாள்.31.03.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.19**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு கொரோனா நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினியான பிளிச்சீங் பவுடர் மற்றும் சுண்ணாம்புத் தூள் வாங்குவதற்கு **31.03.2020–**ஆம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் மன்ற பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1. G.V. ஏஜென்சீஸ், மதுரை
   அ) பிளிச்சீங் பவுடர் – 1 கிலோ – ரூ.45.00 (GST தவிர்த்து)
   ஆ) நீர்த்த சுண்ணாம்பு – 1 கிலோ – ரூ.9.70 (GST தவிர்த்து)

2. விகாஸ் ஏஜென்சீஸ், மதுரை
   அ) பிளிச்சீங் பவுடர் – 1 கிலோ – ரூ.48.00 (GST தவிர்த்து)
   ஆ) நீர்த்த சுண்ணாம்பு – 1 கிலோ – ரூ.10.50 (GST தவிர்த்து)

3. பிரபா ஏஜென்சீஸ், மதுரை
   அ) பிளிச்சீங் பவுடர் – 1 கிலோ – ரூ.49.50 (GST தவிர்த்து)
   ஆ) நீர்த்த சுண்ணாம்பு – 1 கிலோ – ரூ.10.75 (GST தவிர்த்து)

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த G.V.ஏஜென்சீஸ், மதுரை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0434–2/2020/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **849, நாள்.31.03.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.20**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகளை தண்ணீரில் கலந்து வாகனங்கள் செல்ல முடியாத குறுக்கு சந்துகள், அரசு கட்டிடங்கள், ATM மையங்கள், பொது மக்கள் கூடும் இடங்களில் கிருமி நாசினி தெளிப்பதற்கு தேவையான Mechanical Sprayer 2 எண்ணம் நோய் தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி வாங்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி இயந்திரத்தை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.30000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**
3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **850, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.21**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை பணியில் ஈடுபடும் தூய்மை பணியாளர்கள், DBC's பணியாளர்கள் மற்றும் நகராட்சி களப்பணியாளர்கள் அனைவரையும் பாதுகாக்கும் பொருட்டு மேற்படி பணியாளர்கள் பணிக்கு செல்லும் முன்பும் பின்பும் தங்களை பாதுகாத்து கொள்ள தேவையான Hand Sanitizer தேவையான அளவு இருப்பு வைத்திருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் இருப்பில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். எனவே Hand Sanitizer தேவையான அளவு தேவைக்கு ஏற்ப வாங்குவதற்கும் அதற்காகும் மொத்த செலவினத்தை செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**
2. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று குறுகிய கால விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **851, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கான பணியில் பணிபுரியும் பணியாளர்களை பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்பு உபகரணமான Personal Protective Equipment (PPE Kit) 55 எண்ணம் வாங்கி வழங்க அவசர அவசியம் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் மேற்படி 55 எண்ணம் PPE Kit வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.40000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**

**3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **852, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.23**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடிவடிக்கையாக பயன்படுத்தப்படும் லைசால் மற்றும் ஹைப்போகுளோரைடு போன்ற கிருமி நாசினிகளை தண்ணீர் கலந்து பெரிய வாகனம் செல்ல முடியாத குறுக்கு தெருக்களில் சென்று கிருமி நாசினி TATA ACE வாகனம் கொண்டு தெளிப்பதற்கு தேவையான V Star 21K Sprayer ஒன்று மேற்கண்ட நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி வாங்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி இயந்திரத்தை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.15000/—த்தை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1.மன்றம்அனுமதிக்கலாம்.**

**2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று குறுகிய கால விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **853, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.24

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களை பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணம் விநியோகிக்கும் பணிக்கு 30.03.2020–ஆம் தேதியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ. ஈஸ்வரி எண்டர்பிரைசஸ், தேவகோட்டை**

1. கம்பூட் – 1 எண்ணம் – ரூ.1250.00
2. கிளவுஸ் – 1 எண்ணம் – ரூ.180.00
3. மாஸ்க் – 1 எண்ணம் – ரூ.300.00
4. ஒளிரும் ஜாக்கெட் – 1 எண்ணம் – ரூ.450.00
5. ஹெல்மேட் – 1 எண்ணம் – ரூ.500.00
6. ரெயின்கோட் – 1 எண்ணம் – ரூ.1550.00

**ஆ. நாகப்பா இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், காரைக்குடி**

1. கம்பூட் – 1 எண்ணம் – ரூ.1300.00
2. கிளவுஸ் – 1 எண்ணம் – ரூ.200.00
3. மாஸ்க் – 1 எண்ணம் – ரூ.325.00
4. ஒளிரும் ஜாக்கெட் – 1 எண்ணம் – ரூ.500.00
5. ஹெல்மேட் – 1 எண்ணம் – ரூ.550.00
6. ரெயின்கோட் – 1 எண்ணம் – ரூ.1700.00

அலுவலகக் குறிப்பு:– குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஈஸ்வரி எண்டர்பிரைசஸ், தேவகோட்டை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)

தீர்மான எண், நாள் 854, நாள்.31.03.2020

தீர்மானம்

*******

## பொருள் எண்.25

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை பணியில் ஈடுபடும் பணியாளர்களை பாதுகாக்கும் பொருட்டு தேவையான Hand Sanitizer வாங்கும் பணிக்கு 31.03.2020 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங், திண்டுக்கல் – 5 லிட்டர் கேன் –1 லிட்டர் | ரூ.850.00 (GST நீங்கலாக) |
| | 100 மில்லி பாட்டில் – 1 லிட்டர் | ரூ.900.00 (GST நீங்கலாக) |
| 2. | ஸ்ரீ விநாயகா பார்மா, கோயம்புத்தூர் – 5 லிட்டர் கேன் – 1 லிட்டர் | ரூ.900.00 (GST நீங்கலாக) |
| | 100 மில்லி பாட்டில் – 1 லிட்டர் | ரூ.1000.00 (GST நீங்கலாக) |

அலுவலகக் குறிப்பு:– குறைவான விலைப்புள்ளி அளித்த ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் திண்டுக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)

தீர்மான எண், நாள் 855, நாள்.31.03.2020

தீர்மானம்

*******

**பொருள் எண்.26**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு தேவையான Mechanical Sprayer இரண்டு எண்ணம் வினியோகிக்கும் பணிக்கு **31.03.2020** அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங், திண்டுக்கல் – Aspa Bola Mechanical Sprayer 2 Nos | ரூ.**11500.00** (GST நீங்கலாக) |
| 2. | ஸ்ரீ விநாயகா பார்மா, கோயம்புத்தூர் – Aspa Bola Mechanical Sprayer 2 Nos | ரூ.**12200.00** (GST நீங்கலாக) |

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங், திண்டுக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மன்ற முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.04542020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **856, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.27**

கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கான பணியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணமான PPE Kit 55 எண்ணம் வினியோகிக்கும் பணிக்கு **31.03.2020**–ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ விநாயகா பார்மஸ், கோவை – Covid-19 PPE Kit | ரூ.**700.00** (GST நீங்கலாக) |
| 2. | S.P.துரைப்பாண்டி நாடார் அன் சன்ஸ், திண்டுக்கல் – Covid-19 PPE Kit | ரூ.**650.00** (GST நீங்கலாக) |

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான விலைப்புள்ளி அளித்த S.P.துரைப்பாண்டி நாடார் சன்ஸ், திண்டுக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **857, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.28**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.21085/பி3/2016, நாள்.31.08.2016–இன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ஆம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை, சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1, நாள்.05.08.2019ன்படி, 01.08.2019 முதல் 31.12.2019 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நகராட்சியில் ODF++ போன்ற ஆய்வுகள் மேற்கொள்ள உள்ளதாலும், தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி மூன்ற மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.784, நாள்.31.12.2019–இன்படி ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரை ந.க.எண்.0576/2015/எச்1, நாள்.31.12.2019–இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி ரேட்டின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் தூய்மை பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் மார்ச் 31.03.2020 உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும் கேரளா மாநிலத்தில் கொரோனா (Covid-19) தொற்று பரவல் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், அண்டை மாவட்டமான இம்மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயம் இருப்பதாலும், மாநில அரசு 23.03.2020 முதல் 14.04.2020 வரை முழு ஊரடங்கு அமுல்படுத்தியுள்ளதால் பொது மக்கள் நலன் கருதியும், தொற்று பரவும் அபாயத்தை தடுக்கும் பொருட்டும், மேற்கண்ட திடக்கழிவு பணியினை செயல்படுத்த வேண்டிய சூழல் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு எதிர்நோக்கியும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம். அனுமதிக்கலாம். (ந.க.எண்.0576/2015/எச்1)**

**தீர்மான எண், நாள்** **858, நாள்.31.03.2020**

**தீர்மானம்**

*******